BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
No.12, Ganesh Apartment, Trust Square Street,
Medavakkam, Ayanavaram, Chennai – 600023.
ISO 9001:2015 Certified Institution

9TH STD TAMIL

QUARTERLY EXAM MODEL QUESTION PAPER (1) – 2026 & 27

# தமிழ்

## பகுதி - I

**சரியான விடையைத் தெரிவுடன் எடுத்து எழுதுக.** (15 x 1 = 15)

1. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

2. பெயரடை இடம்பெறாத தொடரைக் கண்டறிக.
அ) நல்ல நண்பன் ஆ) இனிய வணக்கம்
இ) எந்த ஓவியம்? ஈ) கொடிய விலங்கு

3. தீரா இடும்பை தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

4. தமிழரசி வள்ளுவரைப் படித்தாள். - ஆகுபெயரின் வகையைக் கண்டறிக.
அ) காலவாகுபெயர் ஆ) காரியவாகுபெயர்
இ) கருவியாகுபெயர் ஈ) கருத்தாவாகுபெயர்

5. 'வா' என்ற வேர்ச்சொல்லின் எதிர்கால வினைமுற்றைத் தெரிந்தெடுக்க.
அ) வருவாய் ஆ) வருகிறேன் இ) வந்தாய் ஈ) வருகிறாய்

6. பின்வருவனவற்றில் அளபெடை இடம்பெறாத தொடர் எது?
அ) கூகூஉ எனக் குயில் கூவியது ஆ) கொக்கரக்கோஒ எனச் சேவல் கூவியது
இ) அண்ணாஅ என அழைத்தான் ஈ) ஓடி வா ஓடி வா

7. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிடமொழி எது?
அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்

8. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறு தழுவுதல்.
ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறு தழுவுதல் தொன்மையான.
இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறு தழுவுதல்.
ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறு தழுவுதல்.

9. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் (மல்லல்) பொருள் என்ன?
அ) மறுமை ஆ) வளம் இ) பூவரசு மரம் ஈ) பெரிய

10. தமிழ்விடு தூது .......... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

11. சரியான தொடர்களைத் தெரிவு செய்க.
    1. நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர்
    2. நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்
    3. மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்

அ) க, ங (1, 3) ஆ) உ, ங (2, 3) இ) க, உ (1, 2) ஈ) க, உ, ங (1, 2, 3)

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் ......

அ) தமிழோவியம் ஆ) மணிமேகலை இ) தமிழ்விடுதூது ஈ) பெரியபுராணம்

13. இப்பாடலின் ஆசிரியர் ........

அ) சேக்கிழார் ஆ) ஈரோடு தமிழன்பன்

இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) குடபுலவியனார்

14. பாடலில் இடம்பெற்றுள்ள அடிமோனைச் சொற்களைத் தேர்ந்தெடுக்க.

அ) எத்தனை-சமயங்கள் ஆ) சித்தர் - சமயங்கள்

இ) சித்தர்-சிந்தனை ஈ) சிந்தனை - வீச்சுகள்

15. எத்தனை எத்தனை - இலக்கணக் குறிப்பு தருக.

அ) உரிச்சொற்றொடர் ஆ) வினைத்தொகை

இ) எண்ணும்மை ஈ) அடுக்குத்தொடர்

**பகுதி - II**

**பிரிவு-அ**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**21 வது வினாவிற்குத் கட்டாயமாக விடையளிக்கவும். (4x2=8)**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் கால்டுவெல்.

ஆ) ஏறு தழுவுதல், தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு.

17. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

18. 'கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம் உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்த - இவ்வடிகளில் கண்ணுக் கினியான் என்பது யாரைக் குறிக்கிறது?

19. கனவிலும் கூட இன்னாதது எவர் நட்பு?

20. தென்திராவிட மொழிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

21. "எனைத்தானும்" எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - ஆ**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (5x2=10)**

22. தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.

அ) சித்திரமும் கைப்பழக்கம் ...........

ஆ) கல்லாடம் படித்தவரோடு .......

23. பகுபத உறுப்பிலக்கணம் தருக. நிறுத்தல்தே

24. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) மேடும் பள்ளமும் ஆ) கண்ணும் கருத்தும்

25. படிப்போம்; பயன்படுத்துவோம்! -

அ) Hero stone ஆ) Water Management

26. காலவாகுபெயர் - குறிப்பு தருக.

27. பிழை நீக்கி எழுதுக.

அ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.

ஆ) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தான்.

28. கலைச்சொல் எழுதுக.

அ) Tropical Zone ஆ) Archaeology

## பகுதி - III

### பிரிவு - அ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (2 x 3 = 6)**

29. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக.

30. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:

தமிழ்நாட்டில் நடைபெறும் ஏறுதழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். எவராலும் அடக்க முடியாத காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

அ) அன்பையும் வீரத்தையும் வளர்த்தெடுக்கும் விளையாட்டு எது?

ஆ) காளைகளுக்கு எப்போது வழிபாடு செய்வர்?

இ) பத்திக்கு ஏற்ற தலைப்புத் தருக.

### பிரிவு - ஆ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும். (2 x 3 = 6)**

32. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

33. "புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்" - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

34. அ) "காடெல்லாம்" எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) "குறமென்றும்" எனத் தொடங்கி "நாச்சிந்துமே" வரையுள்ள தமிழ்விடுதூது பாடலை எழுதுக.

### பிரிவு - இ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (2 x 3 = 6)**

35. உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. அளவாகு பெயர்களின் வகைகளை விளக்குக.

37. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்செல்வத்துள் எல்லாந் தலை. - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (5 x 5 = 25)**

38. (அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

(ஆ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.

39. (அ) பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி வகுப்பாசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

(ஆ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய "கால் முளைத்த கதைகள்" (ஆசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

41. அதியன் என்பவர் தனது சேமிப்புக்கணக்கிலிருந்து ரூபாய் நான்காயிரத்தில், ரூ. 2000 எடுப்பதற்காக அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை அதியனாக எண்ணிக் கொடுக்கப்பட்ட அஞ்சலகப் பணம்பெறும் படிவத்தை நிரப்புக.

42. பொன்மொழிகளை மொழிபெயர்க்க.

அ) 1. A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi

2. You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam

**(அல்லது)**

ஆ) உங்களின் பொறுப்புகள் குறித்து எழுதுக.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **(3 x 8 = 24)**

43. அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) வேளாண்மை, நீரை அடிப்படையாகக் கொண்டது என்பதை விளக்குக.

44. அ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

**(அல்லது)**

ஆ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. முன்னுரை - மழை நீரின் இன்றியமையாமை - மழை நீர் சேகரிப்பின் அவசியம் - மழை நீர் சேகரிக்கும் முறைகள் - மழை நீரைப் பாதுகாத்தல் - முடிவுரை

**(அல்லது)**

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிச் செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

BLESSING TUITION & TUTORIAL CENTRE

**BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.**

**BLESSING POWER GUIDE**

**BLESSING TUITION & TUTORIAL CENTRE**

No.12, Ganesh Apartment, Trust Square Street,
Medavakkam, Ayanavaram, Chennai – 600023.

**ISO 9001:2015 Certified Institution**

**9TH STD TAMIL**

**QUARTERLY EXAM MODEL QUESTION PAPER (2) – 2026 & 27**

# தமிழ்

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **(15 x 1 = 15)**

1. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிடமொழி எது?

அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்

2. "காலம் பிறக்குமுன் பிறந்தது தமிழே! எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!" இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் யாவை?

அ) முரண், எதுகை, அளபெடை ஆ) இயைபு, அளபெடை, அந்தாதி

இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

3. "உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் வரனசைஇ இன்னும் உளேன்" - இக்குறளில் இடம்பெறும் அளபெடை எவை?

அ) சொல்லிசை அளபெடை ஆ) ஒற்றளபெடை

இ) இன்னிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

4. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

5. பகுதி விகுதி மட்டும் இடம்பெறும் சொல் எது?

அ) வென்றார் ஆ) நடந்த இ) வளர்க ஈ) பொருந்திய

6. சரியான தொடர்களைத் தெரிவு செய்க.

க) நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர்

உ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்

ங) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்

அ) க, ங ஆ) உ, ங இ) க, உ ஈ) க, உ, ங

7. பெயரடை இடம் பெறாத தொடரைக் கண்டறிக.

அ) நல்ல நண்பன் ஆ) இனிய வணக்கம்

இ) இந்த ஓவியம்? ஈ) கொடிய விலங்கு

8. தோரண வீதியும், தோமரு கோட்டியும் சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் ..........

அ) ஏவல் வினைமுற்று ஆ) வினைத்தொகை

இ) எண்ணும்மை ஈ) பண்புத்தொகை

9. பொருந்தாத தொடரைக் கண்டறிக.

அ) பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாளும் ஒருவர்.

ஆ) சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்று ஆண்டாள் அழைக்கப்படுகிறார்.

இ) திருவெம்பாவையை இயற்றியவர் ஆண்டாள்.

ஈ) நம்மாழ்வாரின் மகளார் ஆண்டாள்.

10. மணிமேகலையின் முதல் காதை ..........

அ) விழாவறை காதை ஆ) ஊரலர்முனைத்த காதை

இ) மலர்வனம் புக்க காதை ஈ) பளிக்கறை புக்க காதை

11. வானொலி கேட்டு மகிழ்ந்தனர் .......... எவ்வகை ஆகுபெயர் ஆகும்.

அ) கருவியாகுபெயர் ஆ) காரியவாகுபெயர்

இ) சினையாகு பெயர் ஈ) கருத்தாவாகு பெயர்

12. இப்பாடல் இடம் பெறும் நூல் எது?

அ) சிலப்பதிகாரம் ஆ) பெரியபுராணம் இ) மணிமேகலை ஈ) கம்பராமாயணம்

13. இப்பாடலின் ஆசிரியர் பெயர் ..................அ) இளங்கோவடிகள்ஆ) சேக்கிழார்இ) சீத்தலைச் சாத்தனார்ஈ) கம்பர்

14. இப்பாடலில் இடம் பெறும் எதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக.

அ) சாலியின், காலிரும் ஆ) காலிரும், பகடு

இ) ஆலிய, முகிலின் ஈ) ஆலிய, அருவரைச்

15. 'சாலிரும் பகடு போக்கும் கரும் பெரும் பாண்டில் ஈட்டம்' இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் .....................

அ) வட்டம் ஆ) சதுரம் இ) செவ்வகம் ஈ) நீள்வட்டம்

## பகுதி-II

## பிரிவு-1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

ஆ) உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும்.

17. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

18. உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.

19. ஏறு தழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் சுட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

20. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

21. "விடல்" என முடியும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு-2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **(2x5=10)**

22. அமைந்து - பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

23. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) மேடும் பள்ளமும் ஆ) நகமும் சதையும்

24. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ) சித்திரமும் கைப்பழக்கம் ............... ஆ) கல்லாடம் படித்தவரோடு ...............

25. அகராதியில் காண்க.

அ) துகலம் ஆ) சந்தப்பேழை

26. கலைச்சொல் எழுதுக.

அ) Tropical Zone ஆ) Archaeology

27. சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக.

28. பொருள் எழுதி தொடரமைக்க.

அ) அலை ஆ) அழை

## பகுதி-III

### பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **(2x3=6)**

29. மூன்று என்னும் எண்ணுப் பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

30. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

31. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

### பிரிவு-2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **(2x3=6)**

32. வானவில்லை ஒப்பிட்டுப் பெரிய புராணம் கூறும் செய்தியை விளக்கி எழுதுக.

33. திருப்பாவை குறிப்பிடும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக.

34. அ) "தித்திக்கும் தெள்ளமுதாய்த்........" எனத் தொடங்கும் தமிழ்விடு தூது பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) "நீரின்று அமையா........" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

### பிரிவு-3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **(2x3=6)**

35. உயிரளபெடை வகைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

36. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.

37. அளவையாகு பெயர்களின் வகைகளை விளக்குக.

## பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **(5x5=25)**

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

39. அ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய "கால் முளைத்த கதைகள்" (ஆசிரியர் எஸ். ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவிதை எழுதுக.

41. அஞ்சல் அலுவலகத்தில் பணம்பெறும் படிவத்தை நிரப்புக.

42. நீங்கள் பாராட்டுப் பெற்ற சூழல்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

**(அல்லது)**

ஆ) மொழிப் பெயர்க்க.

1. Linguistics _______________
2. Philologist _______________
3. Phonologist _______________
4. Literature _______________
5. Polyglot _______________

## பகுதி-V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **(3x8=24)**

43. அ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித் தன்மைகள் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ) ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

45. அ) பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - மழைநீரின் முக்கியத்துவம் - மழைநீர் சேகரிப்பின் அவசியம் - மழைநீர் சேகரிப்பு முறைகள் - மழைநீர் பாதுகாப்பு - முடிவுரை

**(அல்லது)**

ஆ) பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - தமிழின் சிறப்பு - தாய்மைச் சிறப்பு - பிறமொழித் தாக்கமின்மை - இலக்கிய வளம் - இலக்கண வளம் - மொழிக் கட்டுப்பாடு - செம்மொழி - முடிவுரை

BLESSING TUITION & TUTORIAL CENTRE

BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
No.12, Ganesh Apartment, Trust Square Street,
Medavakkam, Ayanavaram, Chennai – 600023.
ISO 9001:2015 Certified Institution

9TH STD TAMIL

QUARTERLY EXAM MODEL QUESTION PAPER (3) – 2026 & 27

## பகுதி - 1

**I. ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. (15x1=15)**

1. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிட மொழி எது?

அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்

2. தமிழ் விடு தூது _____ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது

அ) தொடர் நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

3. பின்வருவனவற்றில் அளபெடை இடம்பெறாத தொடர் எது?

அ) கூகூஉ எனக் குயில் கூவியது ஆ) கொக்கரக்கோஒ எனச் சேவல் கூவியது

இ) அண்ணாஅ என அழைத்தான் ஈ) ஓடி வா ஓடி வா

4. கவிராஜ மார்க்கம் எந்த மொழியில் எழுதப்பட்ட இலக்கண நூல்

அ) தமிழ் ஆ) கன்னடம் இ) தெலுங்கு ஈ) மலையாளம்

5. "மாடு" - என்பதன் பொருள் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) பக்கம் ஈ) தொலைவு

6. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

7. பகுதி, விகுதி மட்டும் இடம்பெறும் சொல் எது?

அ) வென்றார் ஆ) நடந்த இ) வளர்க ஈ) பொருந்திய

8. தேனி மாவட்டம் _____ என்ற இடத்தில் தமிழுடன் கூடிய காளை ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது

அ) கரிக்கையூர் ஆ) மேட்டுப்பட்டி

இ) சித்திரக்கல் புடவு ஈ) சுந்தம்பட்டி

9. பெயரடை இடம்பெறாத தொடரைக் கண்டறிக

அ) நல்ல நண்பன் ஆ) இனிய வணக்கம்

இ) எந்த ஓவியம்? ஈ) கொடிய விலங்கு

10. திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் எது?

அ) தெரிந்துதெளிதல் ஆ) கேள்வி

இ) பொறையுடைமை ஈ) குறிப்பறிதல்

11. 'அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்' – இது எவ்வகை ஆகுபெயர்

அ) கருவியாகு பெயர் ஆ) தொழிலாகு பெயர்

இ) கருத்தாவாகு பெயர் ஈ) பொருளாகு பெயர்

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) கபிலர் ஆ) திருத்தக்கத் தேவர்

இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) நல்லந்துவனார்

13. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

அ) சீவக சிந்தாமணி ஆ) நற்றிணை இ) பெரியபுராணம் ஈ) மணிமேகலை

BLESSING TUITION & TUTORIAL CENTRE
LEARN GROW EXCEL
BLESSING POWER GUIDE
Knowledge is Power.

14. வேதிகை என்பதன் பொருள் யாது?

அ) திண்ணை ஆ) தூண் இ) கதவு ஈ) சாளரம்

15. இப்பாடலில் உள்ள எதுகைச் சொற்கள் ____.

அ) காய்க்குலை, பூங்கொடி ஆ) பூக்கொடி, வல்லியும்

இ) பத்தி வேதிகை, முத்துத் தாமம் ஈ) கமுகும், வாழையும்

**பகுதி - 2**

**பிரிவு -1**

**II எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 21)** **(4x2=8)**

16. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
17. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?
18. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
19. நிலம் போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?
20. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
21. 'மிகுதியான்' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **(5x2=10)**

22. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ) இளமையில் கல்வி ________. ஆ) கற்றோர்க்குச் சென்ற ________.

23. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

விரிந்தது - விரித்தது **(அல்லது)** குவிந்து - குவித்து

24. சொல்லுக்குள் சொல் தேடுக.

அ) தமிழ் விடு தூது ஆ) எட்டுக்கால் பூச்சி

25. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

மேடும் பள்ளமும் **(அல்லது)** நகமும் சதையும்

26. கலைச்சொற்கள் தருக.

அ) Tropical Zone ஆ) Vowel

27. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

அ) உலகில் மூவாயிரம் மொழிகள் ____________. ஆ) திருத்துத் ____________.

28. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பகுதி - 3**

**பிரிவு - 1**

**IV. எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமாக விடையளிக்கவும்.** **(2x3=6)**

29. சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
30. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
31. ஏறு தழுவுதல் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

**பிரிவு - 2**

**V. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 34)** **(2x3=6)**

32. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
33. திருப்பாவை குறிப்பிடும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக.
34. 'காடெல்லாம்'- எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

**(அல்லது)**

'தித்திக்கும்' எனத் தொடங்கும் தமிழ்விடுதூது பாடலை எழுதுக.

## பிரிவு - 3

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** (2x3=6)

35. பகுபத உறுப்பிலக்கணம் தருக.வந்தனன்

36. சொற்பொருள் பின்வருநிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அளவை ஆகுபெயர்களின் வகைகளை விளக்குக.

## பகுதி - 4

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** (5x5=25)

38. அ) பெரிய புராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) தோழியை எழுப்பும் நிகழ்வைத் திருவெம்பாவை எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?

39. அ) பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி வகுப்பு ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.

41. பொன்மொழிகளை மொழிபெயர்த்து எழுதுக.

அ) The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru

ஆ) The biggest problem is the lack of love and charity - Mother Teresa

42. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (விலங்கு, எழுதி, அகல், கால், அலை)

அ) எண்ணெய் ஊற்றி ________ விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு ________

ஆ) எனக்கு ________ பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம் பார்த்து உன் ________ ஐ வை.

இ) கைப்பொருளைக் கடல் ________ யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி ________ ந்தால் கிடைக்குமா?

ஈ) வீட்டு ________ ஆன நாயுடன் விளையாடுவது மகிழ்ச்சி தரும், வெளியில் அதனைக் கழுத்து ________ உடன் மட்டுமே பிடித்துச் செல்ல வேண்டும்.

உ) எழுத்தாணி கொண்டு ________ ய தமிழை, ஏவுகணையில் ________ எல்லாக்கோளிலும் ஏற்றுங்கள்.

## பகுதி - 5

**VIII அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும்.** (3x8=24)

43. அ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ) வேளாண்மை, நீரை அடிப்படையாகக் கொண்டது என்பதை விளக்குக.

44. அ) தண்ணீர்க் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக.

45. அ) கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக.முன்னுரை - இலக்கியங்களில் ஏறுதழுவுதல் - தொல் சான்றுகள் - பாறை ஓவியம் - பண்பாட்டு அடையாளம் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
No.12, Ganesh Apartment, Trust Square Street,
Medavakkam, Ayanavaram, Chennai – 600023.
ISO 9001:2015 Certified Institution

9TH STD TAMIL

QUARTERLY EXAM MODEL QU STION PAPER (4) – 2026 & 27

# தமிழ்

## பகுதி - I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15 X 1 = 15

1. தோரண வீதியும், தோமறு கோட்டியும் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) ஏவல் வினைமுற்று ஆ) வினைத்தொகை

இ) எண்ணும்மை ஈ) கருத்தாவாகுபெயர்

2. தீரா இடும்பை தருவது எது?

அ) ஆராயாமை ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்

இ) பெருமை, சிறுமை ஈ) நடாமை, பேணாமை

3. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லாத திராவிட மொழி எது?

அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்

4. ஆரிப் சொன்னதில் நம்பிக்கை இல்லாமல் குமார் ------- பார்த்தான். விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான இணைச் சொற்களைத் தேர்ந்தெடுக.

mஅ) மேலும் கீழும் ஆ) நகமும் சதையும்

இ) மேடும் பள்ளமும் ஈ) கண்ணும் கருத்தும்

5. சிந்தா மணி என்பதில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

6. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

7. பெயரடை இடம்பெறாத தொடரைக் கண்டறிக.

அ) நல்ல நண்பன் ஆ) இனிய வணக்கம்

இ) எந்த ஓவியம் ஈ) கொடிய விலங்கு

8. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க கற்றோர்க்குச் சென்ற -------

அ) சிலைமேல் எழுத்து ஆ) செந்தமிழும் நாப்பழக்கம்

இ) சொல்லாதே ஈ) இடமெல்லாம் சிறப்பு

9. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

10. பகுதி, விகுதி மட்டும் இடம் பெறும் சொல் எது?

அ) வென்றார் ஆ) நடந்த இ) வளர்க ஈ) பொருந்திய

11. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

12. இச்செய்யுள் அடியில் இடம்பெற்றுள்ள வசி என்ற சொல்லின் பொருள்

அ) சினம் ஆ) மழை இ) போர் ஈ) குற்றம்

13. அடிஎதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்க.

அ) ஒளிறுவாள், களிறும் ஆ) மறவரும் தேரும்

இ) பசியும் பிணியும் ஈ) வசியும் வளனும்

14. இச்செய்யுள் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்

அ) பெரியபுராணம் ஆ) மணிமேகலை இ) திருப்பாவை ஈ) திருவெம்பாவை

15. அறைந்தனன் - அறை + த்(ந்) + த் + அன்+அன் இச்சொல்லின் விகுதியான "அன்" குறிப்பது

அ) ஆண்பால் வினைமுற்று ஆ) பெண்பால் வினைமுற்று இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்

## பகுதி - II

### பிரிவு. - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4 x 2 = 8**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறுதழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மை உடையது.

ஆ) உலகச் சுகாதார நிறுவனம், உலகம் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர்கொள்ளும் என எச்சரிக்கிறது.

17. “கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன், கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ” இடஞ்சுட்டிப் பொருள் தருக.

18. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

19. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

20. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

21. ‘எனைத்தானும்’ எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5 x 2 = 10**

22. காலவாகுபெயர் - குறிப்பு தருக.

23. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும். இப்பழமொழி பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.

24. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

25. பொருளை எழுதித் தொடரமைக்க.

அ) அலை ஆ) அழை

26. பாய்வன - என்பதன் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

27. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

அ) குவிந்து - குவித்து ஆ) சேர்ந்து - சேர்த்து

28. மஞ்சள் பூசினாள், வற்றல் தின்றான் - இத்தொடர்களின் ஆகுபெயர் வகைகளை எழுதுக.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6**

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

மேலை நாடுகளில் குறிப்பாக, தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில் காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில், ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு. சில நாட்டு விளையாட்டுகளில் காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை கொல்லப்படுதலும் உண்டு. மேலை நாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு, மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

**வினாக்கள்:**

அ) ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டாகக் குறிப்பிடப்படும் விளையாட்டு எது?

ஆ) மேலை நாட்டு காளை விளையாட்டின் முடிவு எப்படிப்பட்டது?

இ) மனிதனுள் ஒளிந்திருக்கும் எந்தப் பண்புகள் மேலை நாட்டுக் காளை விளையாட்டில் வெளிப்படுத்துவதாக உரைப்பத்தியில் குறிப்பிடப்படுகிறது?

30. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

31. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2 x 3 = 6**

32. தோழி எழுப்பும் நிகழ்வைத் திருவெம்பாவை எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?

33. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

34. அடிமாறாமல் எழுதுக.

அ) 'நீர் இன்று' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை 'நிலத்தொடு நீரே' முடிய நான்கு அடிகள் எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'தித்திக்கும்' எனத் தொடங்கும் தமிழ்விடு தூது பாடலை 'விளம்பக்கேள்' முடிய நான்கு அடிகள் எழுதுக.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்செல்வத்துள் எல்லாந் தலை - இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியை விளக்குக.

36. அளவையாகு பெயர்களின் வகைகளை விளக்குக.

37. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பகுதி - IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5 x 5 = 25**

38. அ) திருக்குறளின் கேள்வி அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குறட்பாக்களின் கருத்துக்களை எழுதுக.

**(அல்லது)**

ஆ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.

39. அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிச் செய்திகளைத் திரட்டி தொகுப்புரை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி வகுப்பு ஆசிரியருக்கு விண்ணப்பம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.

41. கொடுக்கப்பட்டுள்ள அஞ்சல் அலுவலகப் பணம் பெறும் படிவத்தை நிரப்புக.

42. அ) நீங்கள் பாராட்டுப் பெற்ற சூழல்களில் எவையேனும் ஐந்தினை எழுதுக.

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்கவும்.

1. Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval
2. Sunset is still my favourite colour, and rainbow is second - Matte Stepanek
3. An early morning walk is a blessing for the whole day - Henry David Thorean
4. Just living is not enough ....... one must have sunshine, freedom and little flower - Hans Christian Anderson.

**குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

திராவிட மொழிக் குடும்பம் மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மொழிக் குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம், முதலானவை தென் திராவிட மொழிகள் எனவும் தெலுங்கு முதலான சில மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனவும் பிராகுயி முதலானவை வட திராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன.

**வினாக்கள்**:

1. திராவிட மொழிக்குடும்பத்தின் வகைகள் யாவை?
2. தென்திராவிட மொழிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் இரண்டினை எழுதுக.
3. தெலுங்கு எந்த திராவிட மொழிகளில் அடங்கும்?
4. வட திராவிட மொழி எது?
5. உரைப்பத்திற்கு உரிய தலைப்பு எழுதுக.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. அ) வேளாண்மை, நீரை அடிப்படையாகக் கொண்டது என்பதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச் செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) 'தண்ணீர்' கதையைச் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

45. அ) குறிப்புகளைப் பயன்படுத்தி 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை - சுற்றுச் சூழல் மாசுபாடு - நில மாசு - நீர்மாசு - காற்று மாசு - ஒலி மாசு - நம் கடமை - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) முன்னுரை - நாட்டுப்பற்று - நாட்டு விழாக்கள் - நாட்ட முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - முடிவுரை. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, பொருத்தமான தலைப்பு எழுதுக.

BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
No.12, Ganesh Apartment, Trust Square Street,
Medavakkam, Ayanavaram, Chennai – 600023.
ISO 9001:2015 Certified Institution

9TH STD TAMIL

QUARTERLY EXAM MODEL QUESTION PAPER (5) – 2026 & 27

# தமிழ்

## பகுதி - I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15 X 1 = 15

1. தமிழ்விடுதூது ……… என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லாத திராவிட மொழி எது?
அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்

3. மாடு என்பதன் பொருள் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) பக்கம் ஈ) தொலைவு

4. பகுதி, விகுதி மட்டும் இடம்பெறும் சொல் எது?
அ) வென்றார் ஆ) நடந்த இ) பொருந்திய ஈ) வளர்க

5. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக
அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

6. உலகச் சுற்றுச்சூழல் நாள் ………
அ) சூன் 5 ஆ) செப்டம்பர் 5 இ) சூலை 15 ஈ) சனவரி 21

7. தோரண வீதியும், தோமறு கோட்டியும் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) ஏவல் வினைமுற்று ஆ) வினைத்தொகை
இ) எண்ணும்மை ஈ) பண்புத் தொகை

8. பைங்கூழ் வளர்ந்தது - ஆகுபெயரின் வகையைக் கண்டறி
அ) காலவாகு பெயர் ஆ) காரியவாகு பெயர்
இ) கருவியாகு பெயர் ஈ) கருத்தாவாகு பெயர்

9. கூலம் என்பதன் பொருள் ………
அ) தானியம் ஆ) பந்தல் இ) தோரணம் ஈ) கரும்பு

10. உலகத் தாய்மொழி நாள் ………
அ) சனவரி 12 ஆ) பிப்ரவரி 21 இ) ஏப்ரல் 14 ஈ) பிப்ரவரி 12

11. முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ………
அ) சர். ஆர்தர் காட்டன் ஆ) இராஜராஜசோழன்
இ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஈ) ஜான் பென்னி குவிக்

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் ……
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) மணிமேகலை ஈ) நாலடியார்

13) இப்பாடலின் ஆசிரியர் ………..
அ) ஔவையார் ஆ) கீரந்தையார் இ) சேக்கிழார் ஈ) குடபுலவியனார்

14) 'யாக்கை' என்பதன் பொருள் யாது?

அ) உணவு　　ஆ) நீர்　　இ) உடம்பு　　ஈ) நிலம்

15) உணவெனப்படுவது - பிரித்து எழுதுக

அ) உணவு + எனப்படுவது　　ஆ) உணவு + என + படுவது

இ) உணவு + எனப்படு + வது　　ஈ) உணவு + எனப்படு + அது

## பகுதி - II

**பிரிவு - 1 எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 21க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்**　　**4 × 2 = 8**

16) விடைக்கு ஏற்ற வினா எழுதுக:

அ) இந்தியாவில் பேசப்படும் மொழிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவை

ஆ) தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்குவது ஏறுதழுவுதல் ஆகும்.

17) கணணி என்பதன் விளக்கம் யாது?

18) 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' - குறிப்புத் தருக

19) நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

20) 'கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன், கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ' இடஞ்சுட்டிப் பொருள் தருக

21) 'தரும்' என முடியும் குறட்பாவை அடிபிறழாமல் எழுதுக

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**　　**5 × 2 = 10**

22) மொழிபெயர்க்க:

அ) Literature　　ஆ) Water Management

23) தொடரைப் பழமொழி கொண்டு நிரப்புக:

அ) சித்திரமும் கைப்பழக்கம் .........　　ஆ) கற்றோருக்குச் சென்ற .........

24) பகுபத உறுப்பிலக்கணம் தருக - கொடுத்தோர்

25) ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக: பணிந்து - பணித்து

26) மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:

அ) மேடும் பள்ளமும்　　ஆ) கண்ணும் கருத்தும்

27) பொருள் எழுதித் தொடர் அமைக்க: குளவி, குழவி

28) இலக்கணக் குறிப்பு தருக:

அ) சிந்தாமணி　　ஆ) கருங்குவளை

## பகுதி - III

**பிரிவு - 1 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**　　**2 × 3 = 6**

29) மூன்று என்னும் எண்ணுப் பெயர்... எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

30) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

உலகின் குறிப்பிடத்தக்க, பழமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழ்வாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர்

1) திராவிடர் பேசிய மொழி எது?

2) திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் யார்?

3) உலகில் குறிப்பிடத்தக்க பழமையான நாகரிகங்களுள் ஒன்று எது?

31) சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்** **2 x 3 = 6**

32) அடுத்த தலைமுறைக்குத் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக

33) திருப்பாவை குறிப்பிடும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக

34) 'தித்திக்கும் தெள்ளமுதாய்' ........ எனத் தொடங்கும் தமிழ்விடு தூது பாடல்

**(அல்லது)**

'காடெல்லாம் கழைக்கரும்பு .......... எனத் தொடங்கும் பெரியபுராணப்பாடல்

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

35) சொற்பொருள் பின்வருநிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக

36) அளவையாகு பெயர்களின் வகைகளை விளக்குக

37) அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக

அ) உலகில் மூவாயிரம் மொழிகள் ............ (பேசு)

ஆ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ............ (செல்)

இ) தவறுகளைத் ............ (திருத்து)

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **5 x 5 = 25**

38) அ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக

**(அல்லது)**

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக

39) அ) உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய 'கால் முளைத்த கதைகள்' (ஆசிரியர் எஸ்.இராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக

**(அல்லது)**

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிச் செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

41) கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக:

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்காடும் செடியும் கடந்துவந்தேன்;எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பலஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 42) அ) நீங்கள் பாராட்டு பெற்ற சூழல்களை ஐந்தினை எழுதுக

**(அல்லது)**

ஆ) பொன்மொழிகளை மொழிபெயர்க்க

1. A nation's culture resides in the hearts and in the soul of its people- Mahatma Gandhi
2. The art of people is a true mirror to their minds- Jawaharlal Nehru
3. The biggest problem is the lack of love and charity Mother Teresa
4. You have to dream before your dreams can come true- A.P.J. Abdul Kalam
5. Winners don't do different things; they do things differently- Shiv Khera

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43) அ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக

**(அல்லது)**

ஆ) அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை. அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக.

45) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருகஅ) முன்னுரை - நீரின்றி அமையாது உலகு - நீரின் இன்றியமையாமை - நீர்நிலைகள் - நீர் பற்றாக்குறை - நீரைச் சேமித்தல் - முடிவுரை

**(அல்லது)**

ஆ) 'சுத்தம் சுகம் தரும்' என்னும் தலைப்பில் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுகமுன்னுரை - உடல் ஆரோக்கியம் - உணவுத் தூய்மை - சுற்றுச் சூழல் தூய்மை - மனத்தூய்மை - சுத்தத்தின் அவசியம் - முடிவுரை.


🎓 **Suitable For**

📘 Class 10 (State Board) AVAILABLE FOR BOTH TAMIL AND ENGLISH MEDIUM

• TAMIL • ENGLISH •MATHEMATICS •SCIENCE •SOCIAL SCIENCE

**COMING SOON....!!!**

**BLESSING POWER GUIDE**

Helping Students Learn

• Grow • Succeed

Give your child the right guidance to build:

Strong study habits

Better focus & confidence

Positive thinking

Effective learning skills

Goal-setting and personal growth

For School Students A supportive program designed to encourage students to discover their potential and move forward with confidence.

Learn Today. Grow Tomorrow. Shine Always.

**For Admissions & Enquiries: Contact Us**

**Contact: 94860 17820 / 81488 14326**

**Limited seats available..!!!**